**செ.வெ.எண்: 40** **நாள்:26.11.2018**

# பத்திரிக்கைச் செய்தி.

சிறுபான்மையினர் கல்வி நிலையங்களில் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் (IDMI) திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களான அரசு உதவி பெறும் / உதவி பெறாத துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த திட்ட மதிப்பீட்டு தொகையில் 75% அல்லது ரூ.50 இலட்சத்திற்கு மிகாமல் மைய அரசின் நிதி உதவி வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தில் நிதி உதவி பெறுவதற்கான தகுதிகள்** - மாநில அரசு அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அரசு உதவி பெறும் / உதவி பெறாத துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியாக இருத்தல் வேண்டும். மூன்றாண்டுகளுக்கு மேல் செயல்பட்டுவரும் அரசு உதவி பெறும் / உதவி பெறாத துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியாக இருத்தல் வேண்டும். சிறுபான்மையினர் கல்வி நிறுவனத்திற்கான விதிமுறைப்படி போதுமான சிறுபான்மையினர் இன மாணவ/மாணவியர் கல்வி பயில அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். சிறுபான்மையினர் கல்வி நிறுவனத்திற்கான அரசு அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தில் நிதி உதவி பெறுவதற்கான விண்ணப்பங்கள் பெற அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் அல்லது மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**